**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களைப் பதவிகளுக்கு நியமித்தல் - 2026**

1925/37 ஆம் இலக்க மற்றும் 2015.07.28 ஆம் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிலும் அதற்கு அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிகளில் 2026.06.30 ஆம் திகதியில் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகுதியுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி வடிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் "சிரேஷ்ட உதவிச் செயலாளர், ஆசிரியர் கல்வியியலாளர் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, இசுருபாய, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல் இடதுமூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமித்தல் - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

I. பதவிகள்:
   I. தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி
   II. ஆசிரியர் கல்லூரி அதிபர்
   III. தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி

II. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி - 2026.11.13

III. பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட தங்களது விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றை (Scan Copy) பின்வருமாறு மின்னஞ்சல் மூலமும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

E- mail = sltesrecruitemant@gmail.com

Subject = Appointment of the Officers in Grade I of the Sri Lanka Teacher Educators' Service to the Posts – 2026 (Name & ID No)

**02. தெரிவுசெய்யும் முறைமை:**

I. இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1925/37 ஆம் இலக்க மற்றும் 2015.07.28 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கூறிய பதவிகளுக்காகத் தகுதியுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரர்களால் பெறப்படும் புள்ளிகளின் முன்னுரிமையின் அடிப்படையில், விண்ணப்பதாரரின் விருப்பத் தெரிவு மற்றும் சேவைத் தேவைப்பாடு என்பவற்றுக்கமையக் கல்விச் செயலாளரின் பரிந்துரையையும் கருத்திற்கொண்டு அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

II. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை V இன் பிரகாரம், உரிய பதவிகளுக்கு நியமிப்பதற்குத் தெரிவுசெய்யப்படுவது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் குறைந்தபட்ச சித்திப் புள்ளிகளான 35 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் மாத்திரமே ஆவர்.

III. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கும் முறைமை இவ்வறிவித்தலின் அட்டவணை II இன் கீழ் தரப்பட்டுள்ளது.

IV. விண்ணப்பிக்க விரும்பும் சேவை நிலையங்கள் மற்றும் பதவிகள் எதிர்பார்க்கப்படும் வரிசை ஒழுங்கிற்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தின் 08 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்படல் வேண்டும். திறமையின் அடிப்படையில் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட பதவிக்கு தகுதிபெறாவிடின் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் வேறு சேவை நிலையமொன்றில் பதவியொன்றிற்கு நியமிப்பதற்குப் பரிசீலிக்கப்படலாம்.

V. அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் செயலாளரின் ESC/APP/SLTES/10/175/2017 ஆம் இலக்க மற்றும் 2021.02.23 ஆம் திகதியுடைய கடிதத்தின் பிரகாரம் நிட்டம்புவை சாரீபுத்த தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பிக்க முடிவது பிக்கு ஒருவருக்கு மட்டுமே என்பதுடன், உப பீடாதிபதி பதவிக்குத் பிக்குமார் மற்றும் பிக்குமார் அல்லாத ஆண் உத்தியோகத்தர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

VI. நியமிக்கப்பட்ட பதவியொன்றில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிப்பதற்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதால் நியமனம் பெற்ற பதவியில் கட்டாயமாக கடமைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

VII. விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படும் விருப்பத் தெரிவு மற்றும் வரிசை ஒழுங்கைப் பிந்தைய சந்தர்ப்பமொன்றில் மாற்றியமைத்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் இல்லை.

VIII. இந் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் திறமையின் அடிப்படையில் பதவியொன்றை வழங்குவதற்காகப் பரிசீலிக்கப்படுவது இக்கட்டத்திற்கு மாத்திரமே ஆகும்.

IX. நிர்வாக வசதிக்காகப் பதவிகள் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், உரிய மொழி மூலம் சேவையாற்றக்கூடிய எந்தவொரு உத்தியோகத்தரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

X. விண்ணப்பதாரரொருவருக்குத் தகுதியில்லை என வெளிப்படுத்தப்பட்டால் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தவறானது எனப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவந்தால் அல்லது ஏதேனும் தவறான விடயம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருப்பின் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு இடமுண்டு.

## 03. தகைமைகள்:

I. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 03 ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த தரம் I உத்தியோகத்தராக இருத்தல்.

II. இவ்விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் வெளியிடப்படும் திகதிக்கு அண்மித்த முந்தைய 05 ஆண்டுக் காலப்பகுதிக்குள் முனைப்புடன் கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்..

04. உரிய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது பத்தரமுல்லை, இசுருபாய, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறியத்தரப்படும். இப்பதவிகளுக்கு நியமித்தல் தொடர்பாகப் அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

05. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மைகள் காணப்படின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவுக்கமைய,

நாலக களுவெவ

செயலாளர்

2026 ஒக்டோபர் மாதம் ......... ஆம் திகதியன்று

**அட்டவணை I**

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிப்பதற்கான நிலவும் மற்றும் எதிர்காலத்தில் வெற்றிடமாகும் பதவிகளும் சேவை நிலையங்களும் (2026.06.30)**

I. தேசிய கல்வியியல் கல்லூரிகள்:

| தொடர் இல. | தேசிய கல்வியியல் கல்லூரிகள் | பீடாதிபதிப் பதவிகள் | | உப பீடாதிபதிப் பதவிகள் | |
|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | சிங்களம் | தமிழ் |
| 1. | ஊவா தேசிய கல்வியியற் கல்லூ | - | - | 02 | - |
| 2. | நில்வலா தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 03 | - |
| 3. | சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி, நிட்டம்புவை | 01 | - | 03 | - |
| | சாரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி, தம்பதெனிய | | - | 02 | - |
| 4. | சியனே தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 02 | - |
| 5. | மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 03 | - |
| 6. | வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | - | 03 |
| 7. | ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | 02 | 03 |
| 8. | அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | - | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூ | - | - | - | 03 |
| 10 | புலத்திசிபுர தேசிய கல்வியியற் கல்லூ | 01 | - | 03 | - |
| 11. | ருவன்புர தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | | 03 | - |
| 12 | ருஹுணு தேசிய கல்வியியற் கல்லூரி | - | | 02 | - |
| 13 | யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | - | 03 |
| 14 | தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி | - | 01 | - | 03 |
| 15 | மகரகம தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 02 | - |
| 16 | ஹாபிடிகம தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 03 | - |
| 17 | பஸ்துன்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 03 | - |
| 18 | வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி | - | - | 02 | - |
| 19 | பேராதனை தேசிய கல்வியியற் கல்லூரி | 01 | - | 03 | - |
| 20 | குளியாப்பிட்டி தேசிய கல்வியியற் கல்லூரி | | - | 02 | - |

I. ஆசிரியர் கல்லூரிகள் :

| தொடர் இல. | ஆசிரியர் கல்லூரி | ஆசிரியர் கல்லூரி அதிபர் | |
|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் |
| 01 | பலபிட்டிய ஆசிரியர் கல்லூரி | 01 | |
| 02 | கம்பளை ஆசிரியர் கல்லூரி | 01 | |
| 03 | கிராகம ஆசிரியர் கல்லூரி | 01 | |
| 04 | கொட்டகலை ஆசிரியர் கல்லூரி | | 01 |
| 05 | மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூ | | 01 |
| 06 | அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரி | | 01 |
| 07 | கோப்பாய் ஆசிரியர் கல்லூரி | | 01 |

அட்டவணை II

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிப்பதற்கான கட்டமைக்கப்பட்ட - நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கல் திட்டம் 2026**

**01. சிரேஷ்டத்துவம் :** **அதிகபட்சம் 50 புள்ளிகள்**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I இல் சேவைக்காலத்திற்காக தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்ட திகதியிலிருந்து புள்ளிகள் வழங்கப்படுவதுடன், வழங்கப்படும் புள்ளிகளின் அளவு அரச சேவை ஆணைக்குழுச் சுற்றுநிருப இலக்கம் 01/2019 இன் பிரகாரம் தீர்மானிக்கப்படும். அதாவது, அதிக சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு சேவை அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு விகிதாசார ரீதியில் தரம் I இல் சேவைக் காலத்திற்காகப் புள்ளிகள் வழங்குதலும் மேற்கொள்ளப்படும்.

**02. மேலதிக கல்வித் தகைமைகள் :** **அதிகபட்சம் 12 புள்ளிகள்**

இந் நேர்முகப் பரீட்சையின் அடிப்படைத் தகைமையாக கருத்திற்கொள்ளப்படும் 3 ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டலின்போது கருத்தில் கொள்ளப்படும் கல்வித் தகைமைகள் தவிர்த்து, அரச சேவை ஆணைக்குழுச் சுற்றுநிருப இலக்கம் 01/2025 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவுள்ள பின்வரும் மேலதிக கல்வித் தகைமைகளுள் மிக உயர்ந்த மேலதிக கல்வித் தகைமை ஒன்றிற்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | கலாநிதி (PhD ) | - 12 புள்ளிகள் |
| I. | தத்துவமாணி (M Phil) | - 10 புள்ளிகள் |
| II. | முதுமாண (MA, MSc, MBA, Med, MATE.....) | - 08 புள்ளிகள் |
| III. | பட்டப் பின் டிப்ளோமா | - 06 புள்ளிகள் |

மேலும், விண்ணப்பதாரர்களால் அது தொடர்பான உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**03. இணைப்பு மொழித் தேர்ச்சி:** **அதிகபட்சம் 06 புள்ளிகள்**

கல்வித் துறைக்குத் தொடர்புள்ளதாக வழங்கப்படும் சில தலைப்புகளுள் எழுந்தமாறாக தெரிவுசெய்யப்படும் தலைப்பொன்றின் கீழ் 03 நிமிடக் கால அளவிற்குச் முன்வைப்பு ஒன்றை ஆங்கில மொழியில் செய்தல் வேண்டும் என்பதுடன், அதற்காகப் பின்வரும் நியதிகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | விடய உள்ளடக்கம் | - 2 புள்ளிகள் |
| II. | முன்வைப்பு பாணி | - 2 புள்ளிகள் |
| III. | மொழிக் கையாளுகை | - 2 புள்ளிகள் |

**04. தகவல் தொடர்பாடல் திறன்:** **அதிகபட்சம் 02 புள்ளிகள்**

06 மாதங்கள் அல்லது 720 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் / தகவல் தொழினுட்பம் தொடர்பாக தொடர்ந்துள்ள பாடநெறியொன்றிற்கு

மேலும், இதன் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களுக்குச் சான்றிதழில் அல்லது விவரிக்கப்பட்ட புள்ளிப் பட்டியலில் (Transcripts இல்) உரிய பாடநெறியின் கால அளவு குறிப்பிடப்பட்டிருப்பின் மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

**05. இணைப் பாடவிதான செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள் - அதிகபட்சம் 10 புள்ளிகள்**

I. விளையாட்டு / நாடகம் / கலை விழாக்கள் அல்லது சாரணர் / மாணவர் படையணி / எடின்பரோ போன்ற சந்தர்ப்பங்களில் ஆசிரியர் பயிலுனர்கள் / ஆசிரியர் மாணவர்களை வழிநடத்திப் பெற்றுக்கொண்ட வெற்றிகளுக்காகக் கிடைத்த கௌரவிப்பு / பாராட்டுச் சான்றிதழ்கள் அல்லது ஆசிரியர் கல்வித் துறையின் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்ட விசேட பங்களிப்புகள் / புதிய கண்டுபிடிப்புகளுக்காகப் பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள்.

[ [கல்விச் செயலாளர் / பிரதம ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அல்லது ஏதேனும் ஒரு சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் அல்லது அரசாங்கம் சார்ந்த நிறுவனமொன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனமொன்றின் தலைவரினால் வெளியிடப்பட்ட சான்றிதழ்களுக்கு (இங்கு உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் நிச்சயமற்ற தன்மை எழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் வினவி அவ்வாறு வழங்கப்படும் புள்ளிகள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.)]

ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சமாக 04 சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.

- 08 புள்ளிகள்

II. கல்விச் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பொது 230 B பாராட்டு மற்றும் குற்றம் குறை கூறல் மாதிரிப்படிவத்திற்கு அமைவாக முறைப்படி வழங்கப்பட்ட சேவை மதிப்பீடுகள் - 02 புள்ளிகள்

(திணைக்களத் தலைவர் என்பது பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) ஆவார்.)

ஒன்றிற்கு 1 புள்ளி வீதம் அதிகபட்சமாக 2 சேவை மதிப்பீடுகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.

(மேலே 05.I இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியொன்றிற்காக மேற்கொள்ளப்படும் சேவை மதிப்பீடுகள் இதன் கீழ் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.)

06. **ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்:** **அதிகபட்சம் 15 புள்ளிகள்**

**அ). ஆராய்ச்சி** **- 05** புள்ளிகள்

பட்டப் பின் பட்டத்திற்கு / பட்டப் பின் டிப்ளோமாவிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகள் / ஆய்வறிக்கைகளுக்காகப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், பகிரங்க ஆராய்ச்சி கருத்தரங்கு மண்டபமொன்றிற்குச் (Research Symposium) சமர்ப்பிக்கப்பட்ட அல்லது ஆராய்ச்சிச் சஞ்சிகையொன்றில் (Research Journal) பிரசுரிக்கப்பட்ட 01 ஆராய்ச்சி அறிக்கைக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

I. தனிநபர் ஆராய்ச்சி அறிக்கை - 05 புள்ளிகள்

II. குழு ஆராய்ச்சி அறிக்கை - 03 புள்ளிகள்

(பகிரங்க கருத்தரங்கு மண்டபம் என்பது ஆராய்ச்சித் துறைக்குப் பொருத்தமான அறிஞர் ஒருவர் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட துறைக்குப் பொருத்தமான அறிஞர் ஒருவர் மற்றும் குறைந்தபட்சம் இரண்டு பதவிநிலை உத்தியோகத்தர்களையேனும் கொண்ட ஒரு மண்டபமாகக் கருதப்படும்.)

**ஆ). வெளியீடுகள்** **- 10** புள்ளிகள்

I. விடயம் சார்ந்து வெளியிடப்பட்ட சர்வதேச நியமப் புத்தக இலக்கமொன்றைப் (ISBN) அல்லது சர்வதேச தொடர் சஞ்சிகை இலக்கமொன்றைப் (ISSN) பெற்ற பிரசுரமொன்றிற்காக. (தனிநபர் எழுத்தாசிரியர் உரிமையைக் கொண்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கும் போது கருத்திற்கொள்ளப்படும்.)

   ஒன்றிற்கு 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 01 இற்காக

II. விடயம் சார்ந்து வெளியிடப்பட்ட சர்வதேச நியமப் புத்தக இலக்கமொன்றைப் (ISBN) பெற்ற பிரசுரமொன்றின் அத்தியாயம் அல்லது எழுத்தாசிரியர் உரிமையைக் கொண்டு பிரசுரிக்கப்பட்ட நடுவர் சஞ்சிகைகள் (Refereed Journals) (அத்தியாயம் அல்லது நடுவர் சஞ்சிகைக்குத் தனிநபர் எழுத்தாசிரியர் உரிமை இருத்தல் வேண்டும்.)

   ஒன்றிற்கு 02 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 02 இற்காக

III. எழுத்தாசிரியர் உரிமையைக் கொண்டு பிரசுரிக்கப்பட்ட சாராம்சங்கள் (Abstracts) அல்லது பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விடயம் சார்ந்த கட்டுரைகள்.

   ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் அதிகபட்சம் 02 இற்காக

07. **நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் ஒட்டுமொத்த திறமை :** **அதிகபட்சம் 05 புள்ளிகள்**

**மொத்தம் 100 புள்ளிகள்**

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I இற்கு உத்தியோகத்தளைப் பதவிகளுக்கு நியமித்தல் - 2026**

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(A4 அளவுத் தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்)

**01.** (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்)
(வண/ திரு/ திருமதி/ செல்வி) ..........................................................................................
முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
Rev/Mr/Mrs/Miss ..........................................................................................

(ii) முதல் எழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்
:..........................................................................

**02.** (i) கடமை முகவரி: ..........................................................................................
(ii) தனிப்பட்ட முகவரி:..........................................................................................

(iii) கடமை தொலைபேசி இலக்கம்: ......................................

(iv) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் : ......................................
(v) மின்னஞ்சல் முகவரி: ......................................

**03.** (i) பிறந்த திகதி: ........................................

(ii) தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..............................................

**04.** (i) முதல் நியமனத் திகதி மற்றும் தரன்/ வகுப்பு :
..................................................................

(ii) தற்போதைய தரம் மற்றும் அதற்கு நியமிக்கப்பட்ட திகதி: .........................................

(iii) தற்போதைய சேவை நிலையம்: ........................................................................

**05. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் பற்றிய விபரங்கள் :**

(i) முதல் பட்டம்

| பட்டத்தின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

(ii) பட்டப் பின் கல்வி டிப்ளோமா

| பட்டத்தின் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | பாடநெறிக்குச் சென்ற காலம் மற்றும் செல்லுபடியாகும் திகதி | விஷேட/ திறமை/ சாதாரண சித்தயா என்பது பற்றிய விபரம் | பாடங்கள் பற்றிய விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iii) முதுமானி பட்டப்/ வேறு உயர் பட்டங்கள்

| சான்றிதழில் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | வகுப்பு | பாடங்கள் பற்றிய விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) முகாமைத்தும் அல்லது கல்வி முகாமைத்துவம் தொடர்பாக பெற்றுள்ள பட்டப் பின் டிப்ளோமா

| சான்றிதழில் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | வகுப்பு |
|---|---|---|
| | | |

(v) ஏனைய கல்வித் தகுதிகள்:

.......................................................................................................................

.......................................................................................................................

(vi) ஏனைய தொழிற் தகைமைகள் (டிப்ளோமா சான்றிதழ்கள் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர் சான்றிதழ் பற்றிய விபரங்கள்)

| சான்றிதழில் பெயர் மற்றும் வழங்கிய நிறுவனம் | பாடநெறிக்குச் சென்ற காலம் | பாடங்கள் பற்றிய விபரங்கள் |
|---|---|---|
| | | |

**06. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திறமை பற்றிய விபரங்கள்.**

| பாடநெறிச் சான்றிதழ் | வழங்கிய நிறுவனம் | பாடநெறிக் காலம் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

**07.** அனுபவமும் சேவை விபரங்களும் (முன்னர் வகித்த பதவிகளும் அப்பதவிகளை வகித்த காலப்பகுதிகளும் திகதிகளுடன் குறிப்பிடப்படல் வேண்டும்.)

| சேவை நிலையம் | பதவி | நிரந்தரமா? / தற்காலிகமா | முதல் | வரை |
|---|---|---|---|---|
| | | | | |

**08. எதிர்பார்க்கும் சேவை நிலையங்கள் மற்றும் பதவிகள் தொடர்பான விபரங்கள்**

| சேவை நிலையங்கள் | விண்ணப்பிக்கும் பதவிகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

குறிப்பு : அறிவித்தலின் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 03 பதவிகளுக்கு மாத்திரமே இந்த நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்பதால், அப்பதவிகளை மாத்திரம் அட்டவணை I ஐக் கவனத்திற்கொண்டு எதிர்பார்க்கும் முன்னுரிமை வரிசைக்கமைய மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடவும்.

**09. ஒழுக்காற்று / விசாரணை விபரங்கள்:-**

9.1 ஏதேனும் ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றமொன்றினால் தாங்கள் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளீர்களா?

(அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்) ........................................

..........................................................................................

..........................................................................................

9.2 தற்போது தங்களுக்கு எதிராக திணைக்கள ரீதியான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படுகின்றதா? இல்லையெனின், நீதிமன்றத்தின் முன் வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றதா? (அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடவும்.)

..........................................................................

..........................................................................................

..........................................................................................

இவ்வண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை என வெளிப்படும் பட்சத்தில், அதனடிப்படையில் நான் இப்பதவியைப் பெறுவதற்குத் தகுதியற்றவராவேன் என்றும், பதவியைப் பெற்ற பின்னர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை என வெளிப்பட்டால் நான் எவ்வித நஷ்டஈடும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும் அறிவேன்.

| | |
|---|---|
| .................. | .................................................. |
| திகதி | விண்ணப்பதாரரின் கையொப்பம் |

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

வண / திரு / திருமதி / செல்வி*......................................................................... அவர்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

இவர் / இவர்* இந்நிறுவனத்தில் ....................................................... ஆக கடமையாற்றுகின்றார் என்பதையும்,

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை / சரியானவையல்ல* என்பதையும்,

கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர் / உட்படுத்தப்படாதவர்* என்பதையும்,

தற்போது ஒழுக்காற்று, கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுபவை / மேற்கொள்ளப்படாதவை* என்பதையும்,

இவருடைய 2026.-------- (அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதி) திகதியன்றுக்கு அண்மித்த முந்தைய 5 வருட சேவைக்காலம் முனைப்புடன் கூடிய மற்றும் திருப்திகரமானவை / திருப்திகரமானவையல்ல* என்பதையும் அறியத்தருகிறேன்.

* தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்..

திகதி: ...................

நிறுவனம் : .....................................................

.....................................................

நிறுவனத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை